செ.வெ. எண்: 481 நாள்: 25.07.2011

# செய்தி வெளியீடு

தற்சமயம், அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும், ஊனத்தின் தன்மைக்கான மருத்துவச் சான்றிதழ், பிரதி செவ்வாய்கிழமை அன்று, சென்னை, கே.கே. நகரிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில வள மற்றும் பயிற்சி மையத்தில் வழங்கப்படுகின்றது. இம்மையத்திற்கு வரும் மாற்றுத்திறனாளிகளுக்கான எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

இம்மையத்தில் போதிய இட வசதியின்மை காரணமாகவும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தரமான சேவை வழங்கவும், ஒவ்வொரு ஊனத்திற்கும் தனித்தனியே நாட்கள் ஒதுக்கப்பட்டு, இம்மையத்தில் மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது. இதன் விவரம்:

| | | |
|---|---|---|
| **திங்கட்கிழமை** | – | செவித்திறன் குறையுடையோர் மற்றும் கண் பார்வை குறையுடையோர். |
| **செவ்வாய்கிழமை** | – | கை, கால் இயக்க குறைபாடு உடையோர், மூளை முடக்கு வாதத்தினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் தொழுநோய் குணமடைந்தோர். |
| **வெள்ளிக்கிழமை** | – | மனவளர்ச்சிக் குன்றியோர், பல்வகை ஊனத்தினால் பாதிக்கப்பட்டோர், மனநலம் பாதிக்கப்பட்டோர் மற்றும் புற உலகு சிந்தனையற்றோர். |

**இது <u>2.8.2011</u> முதல் நடைமுறைக்கு வருகின்றது.**

மாற்றுத்திறனாளிகள், தங்களுக்கு உரிய நாளில், இம்மையத்திற்கு பரிசோதனைக்கு வந்து மருத்துவச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுமாறும், இதற்கு தங்களது முழு ஒத்துழைப்பை தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**